முருகப்பெருமான் துணை

**மகான் இடங்கழி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.06.2022, செவ்வாய்கிழமை

1. தன்னார்வ தொண்டர் படைகளை
தயவாக உருவாக்கும் அரங்கனே
அண்ணலே உன் அவதாரம்
அகிலம் அறிய மாற்றம் நிகழுமென
2. எனக்கூறி அருளாசிதன்னை
இயம்பிடுவேன் இடங்கழி நாயனாரும்
ஞானமுற சுபகிருது மிதுன திங்கள்
நாட்டிடுவேன் முன்னான்கீர் திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 14 நாள், 28.06.2022 செவ்வாய்கிழமை)
3. வாரமதில் உலகநலமுற உரைப்பேன்
வரமாக அரங்கன் தருகின்ற
சோரம் நீக்கும் சடாட்சர தீட்சை
சுருதிபடி மக்கள் ஏற்றுவர
4. வருகவே ஞானிகளின் ஆசி
வரமாக பாதுகாப்பாக வரும்
தருமபலமாக சிந்தை மாறி
தன்வினை அறிந்து நீக்கி வாழும்
5. வாழும் உயர் குணம் கூடும்
வையகம் காக்கும் தன்மைக்கு
நாளும் நாளும் ஞான பூசை
ஞானிகள் பேரில் செய்து தொடரும்
6. தொடரும் வாய்ப்புக் கிட்டும்
தொடருகின்ற செயல் வழி
இடரென்பதே நெருங்கா வண்ணம்
எல்லாப் பாதுகாப்பும் கிட்டும்
7. கிட்டவே அரங்கனாக உலகில்
குருபரனே அருளுகின்றாரெனும்
கட்டம் வெல்லும் மகா சூட்சுமம்
கருணைபட தானாய் விளங்கும்
8. விளங்கவே குருவருளை விட்டு
விலகாத வண்ணம் வாழ்வு
களங்கமற தூய்மை ஆகும்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு என
9. என யாவற்றிலும் முதன்மை
இறையருளாகவே உண்டாகும்
ஞான தேசிகன் காட்டுகின்ற
ஞானப் பாதையே சிறந்ததென

10. என திடமும் பலமும் கூடி
எக்காலமும் அரங்கனருளை
மனம் விட்டுவிடா இருகப்பற்றி
மண்ணுலகில் ஞானசித்தி காணும்

11. காணவே அரங்கன் வழியே
கலியை மீட்கும் உயர்வழி
ஞானம் கருதி உலகோர்வர சடுதி
ஞான ஆட்சிக் காலம் ஆகும் அருளாசி முற்றே

–சுபம்–